Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 54

## பரிபாடல் கட்டமைப்பும் திருமால் பற்றிய தொன்மமும்

*டாக்டர் வானதி பகீரதன்*
*மூத்த தமிழ் விரிவுரையாளர்*
SVIAS, *கிழக்கு பல்கலைக்கழகம்*
*மின்னஞ்சல்*: vanathyp@esn.ac.lk

எட்டுத்தொகை நூல்களுள் 'ஓங்கு பரிபாடல்' எனச் சிறப்பிக்கப்படும் இலக்கியமாக விளங்கும் பரிபாடல் கட்டமைப்பில் திருமால் பற்றிய தொன்மம் ஆறு பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமாலின் தோற்றப் பொலிவு, அருட்சிறப்பு, வீரச்சிறப்பு, கொடிச்சிறப்பு, புராணச் செய்திகள், அவதாரச் செய்திகள், திருமலிருஞ்சோலையின் வளம், ஆதிசேடனின் பெருமை முதலானவற்றைக் குறிப்பிடும் போது இத் தொன்மம் பற்றி அறிய முடிகின்றது. அந்தவகையில் பரிபாடலின் அமைப்பினையும் செவ்வேளின் தொன்மம் பற்றிய செய்திகளையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## பரிபாடல் கட்டமைப்பு

பரிபாடல் என்பது பரிபாட்டு யாப்பில் அமைந்த ஒரு இசைப் பாடலாகும். நான்கு வகைப் பாவில் இது பரிபாடல் என்று சொல்ல முடியாத அளவில் நான்கிற்கும் பொதுவாய் அமைந்த யாப்பினை உடையது. எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதனை

"பரிபாடலே தொகைநிலை வகையின்

இது பா என்னும் இயல்நெறி இன்றி

பொதுவாய் நிற்றற்கு உரித்து என மொழிப"(தொல்காப்பியம், செய்யுளியல 425)

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். பரிபாடல் என்பதற்கு இளம்பூரணர் நான்கு பாவின் உறுப்புக்களும் கொண்ட பாடல் எனவும் பேராசிரியர் வெண்டளையும் ஆசிரியத்தளையும் விராய் வந்து துள்ளலோசைபடச் சொல்லப்படும் எனவும் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் வெண்பா உறுப்பாகப் பரிபாடல் வரும் எனவும் கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து ஆகிய நான்கு உறுப்புக்களைக் கொண்டு காமப் பொருளில் வரும் எனவும் குறிப்பிடுகின்றார். இதனை பின்வரும் நூற்பாவின் மூலம் அறிய முடிகின்றது.

"நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே

கைக்கிளை பரிபாட்டு அங்கதச் செய்யுளொடு

ஒத்தவை எல்லாம் வெண்பா யாப்பின" (தொல்காப்பியம், செய்யுளியல் 423)

பரிபோல் கால்கள் பரிந்து நடை போடும் பண்ணிசைப் பாடல்களைக் கொண்ட பரிபாடலில் எழுபது பாடல்கள உள்ளன. பரிபாடலின் எண்ணிக்கையை .

"திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்தொரு பாட்டுக்

காடுகாட் கொன்று - மருவினிய வையை இருபத்தாறு

மாமதுரை நான்கென்ப செய்யரி பரிபாடற்றிறம்"

என்ற செய்யுளின் மூலம் அறியலாம். தற்போது இருபத்து இரண்டு பாடல்களே கிடைத்துள்ளன. பதின்மூன்று புலவர்களால் பாடப்பட்ட பரிபாடலுக்குப் பத்துப் பேர் இசை வகுத்துள்ளனர். முதற் பன்னிரு பாடல்களும் பாலை யாழிலும் அடுத்து வரும் ஐந்து பாடல்களும் நோதிரம் என்ற பண்ணிலும் இறுதி ஐந்து பாடல்களும் காந்தாரம் என்ற பண்ணிலும் அமைந்துள்ளது.

எனவே பரிபாடல் என்ற பெயர் அதன் இசை, யாப்பு காரணமாகப் பெற்ற பெயர் எனக் கூறலாம். பரிபாடல் விழாக்காலங்களில் பலர் சேர்ந்து பாடும் ஒரு

இசைப் பாட்டாகவும் அமைகின்றது. கிடைக்கப்பெற்றுள்ள இருபத்;து இரண்டு பாடல்களுள் திருமாலுக்குரியதாக ஆறு பாடல்களும் செவ்வேளுக்குரியதாக எட்டுப்பாடல்களும் வையை பற்றியதாக எட்டுப் பாடல்களும் அமைந்துள்ளன. உரையாசிரியர்களின் மேற்கோளாக எடுத்துக்காட்டிய பாடல்களும் பரிபாடற் பகுதிகள் என பதிப்பாசிரியர்களால் தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரிபாடலில் திருமால் பற்றிய தொன்மம்

திருமாலுக்குரிய ஆறு பாடல்களாக கடவுள் வாழ்த்தாக வரும் முதல் நான்கு பாடல்களும் 13, 15ஆம் பாடல்களும் அமைகின்றன. இப் பாடல்களில் இறைவனின் தோற்றப்பொலிவு, அருட்சிறப்பு, வீரச்சிறப்பு, கொடிச்சிறப்பு, புராணச்செய்திகள், அவதாரச்செய்திகள், திருமலிருஞ்சோலையின் வளம், ஆதிசேடனின் பெருமை என்பன விதந்து கூறப்பட்டுள்ளன. திருமாலின் தோற்றத்தினை வர்ணிக்கும் போது அவன் ஆதிசேடனின்மீது பள்ளி கொள்ளும் காட்சி சிறப்பாகக் காட்சிப்படுத்தப்படுகின்றது. ஆதிசேடன் திருமாலின் திருமுடிக்கு மேலாக தன் தலைகளைப்படமாக விரித்து குடைபோல நிழல் செய்துகொண்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

“ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை

தீயுமிழ் திறனொடு முடிமிசை அணவர …”(பரிபாடல் 1:1-2)

“ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்…”(பரிபாடல் 1:46 )

“ஆயிரஅணர்தலைஅரவுவாய்க்கொண்ட…”(பரிபாடல்3:60)

“தன்னுரு இகழும் பாற்கடல் நாப்பண்

மின்னவிர் சுடர்மணி ஆயிரம் விரித்த

கவைநா அருந்தலைக் காண்பின் சேக்கை

துளவஞ் சூடிய அறிதுயிலோனும்….”(பரிபாடல் 13:26-29)

பாற்கடலின் நடுவே மின்னலைப் போன்று ஒளிவீசுகின்ற நாக மணியைக் கொண்ட ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் என்னும் பாம்பினை அணையாகக் கொண்டு திருமால் பள்ளி கொள்ளும் காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது. ஆதிசேடன் பற்றிய தொன்மம் அவனை ஐந்து தலைகளை உடையவனாகவும் ஆயிரம் தலைகளை உடையவனாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

திருமாலின் மேனியழகை வர்ணிக்கும் போது எப்போதும் திருமகளை விட்டு நீங்காத பரந்த மார்பினையும் வெண்சங்;கு போன்ற நிறத்தினையும் காயாம்பூப் போன்ற மேனியழகையும் நீலமணி, கார்மேகம், கருங்குன்று, அலைகளற்ற கடல்நீர் போன்ற நிறத்தையுடைய மேனியழகைக் கொண்டவன் என அவனது உடலழகு சிறப்பிக்கப் படுகின்றது. இதனைப் பின்வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

"திரு ஞெமர்ந்து அமர்ந்த மார்பினை...." ( பரிபாடல் 1: 7 )

"திரு மறு மார்ப..." ( பரிபாடல் 1: 34 )

"மாயுடை மலர் மார்பின் மையில்வால் வளை மேனிச் ...." (பரிபாடல்1-:3)

"பூவை விரிமலர்புரையும் மேனியை..." ( பரிபாடல் 1: 6 )

"பறவாப்பூவைப் பூவினோயே..." ( பரிபாடல் 3: 73)

"மணிதிகழ் உருவின் மாயோ.." (பரிபாடல் 3: 3)

"நின்னது திகழொளி சிறப்பிருள் திருமணி..." (பரிபாடல் 2: 53)

"திருமணி திரைபாடவிந்த முந்நீர்

வருமமை யிருஞ்சூல் மூன்றும் புரையு மாமெய்..." (பரிபாடல் 4: 6-7 )

திருமாலின் தோற்றப் பொலிவினை வர்ணிக்கும் போது அவனது கண்கள், கைகள், மார்பு, மேனி, ஆடை, ஆபரணங்கள், முடி, கருடக்கொடி, சக்கரப்படை, ஆதிசேடன் முதலியவை சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளன. தேன் பொருந்திய பசுமையான துளசிமாலையை அணிந்துள்ளவன் எனவும் கரிய குன்றை ஒத்த நிறத்தை உடையவன் எனவும் வெண்மையான பேரொளியுடைய குண்டலத்தினை அணிந்திருப்பவன் எனவும் கருடக் கொடியையும் தண்டு, சக்கரம், கட்டமைந்த வில், வாள் முதலிய படைக்கலங்களையும் உடையவனாகக் காட்சிதருபவன் எனவும் திருமாலைப் போற்றிப் பரவுவதைக் காணலாம்.

திருமாலின் கண்ணழகு பற்றிய தொன்மத்தை நோக்கினால் அவன் செங்கணான் எனவும் சிவந்த செந்தாமரை மலர் போன்ற கண்களைக் கொண்டவன் எனவும் வர்ணிக்கப்படுகின்றான். அதாவது திருமாலின் கண்கள் இரண்டும் இரண்டு தாமரைப் பிணையல்கள் எனவும் எரிமலர் போன்ற கண்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

“கண்ணே புகழ்சால் தாமரை அலரிணைப் பிணையல்...” (பரிபாடல் 2: 53 )

“எரிமலர் சினைஇய கண்ணை....” (பரிபாடல் 1: 7 )

“புவ்வத்தாமரை புரையுங் கண்ணன்...” (பரிபாடல் 15: 49 )

“அறாஅ மைந்தின் செறாச் செங்கண்....” (பரிபாடல் 3: 57 )

“செயிர்தீர் செங்கண் செல்வ....” (பரிபாடல் 4: 9 )

பரிபாடலில் திருமாலின் மேனியழகு, மார்பினழகு, கண்ணழகு மாத்திரமன்றி கைகளின் அழகும் விதந்து கூறப்பட்டுள்ளதைக் காணலாம். பரிபாடல் மூன்றாம் பாடல் திருமாலை இருகை மால் எனவும் பல கைகளைக் கொண்டவன் எனவும் எண்ணி அளந்து எல்லையிட்டுக் கூறமுடியாத உடல்களைக் கொண்டவன் எனவும் குறிப்பிடுகின்றது. இருகைமால், முக்கை முனிவ, நாற்கை அண்ணல், ஐங்கை மைந்த அறுகை நெடுவேள், எழுகையாள, எண்கை ஏந்தல், ஒன்பதிற்றுத் தடக்கை, மன்பேராள, பதிற்றுக்கை மதலி, நூற்றுக்கையாற்றல் என பல கைகளைக் கொண்ட பல தெய்வங்களாகவும் இருப்பவன் என திருமால் பற்றிய தொன்மம் கட்டமைக்கப் பட்டுள்ளது.

“ஆயிரம் விரித்த கைம் மாய மள்ள

பதினாயிரங்கை முது மொழி முதல்வ

நூறாயிரங்கை ஆறறி கடவுள்

அனைத்தும் அல்ல பலஅ டுக்கல் ஆம்பல்

இனைத்தென எண்வரம்பு அறியா யாக்கையை” (பரிபாடல் 3:40-45)

திருமாலின் தோற்றப்பொலிவு, அழகுச் சிறப்பினைக் குறிப்பிடும் போது அவன் அணிந்துள்ள ஆடை ஆபரணங்களின் அழகும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். திருமால் பல்வேறு வகையான ஆபரணங்களையும் அணிந்து அழகுடன் காட்சியளிப்பதைப் பரிபாடல் விளக்குகின்றது. மலர்மாலைகள், துளசி மாலைகளுடன் பொன், மணிகளால் இழைக்கப்பட்ட ஆபரணங்களைச் சூடி அழகுடன் காட்சியளிப்தாகக் குறிப்பிடுகின்றது. தெரிந்தெடுக்கப்பட்ட மணிகளால் தொடுக்கப்பட்ட ஒளிவீசும் பூணாரத்ததையும் செம் பொன் போன்ற நிறமுடைய ஆடையையும் திருமால் அணிந்திருப்பதாகப் பரிபாடல் முதலாம் பாடல் விபரிக்கின்றது.

மார்பினில் தெரிமணி பிறக்கும் பூணினை மால்வரை

எரிதிரிந்தன்ன பொன் புனை உடுக்கையை....”(பரிபாடல் 1: 9 - 10)

“ஓங்குயர் வானின் வாங்குவில் புரையும்

பூண் அணி கவைஇய வாரணி நித்திலம்

நித்தில மாதணி அத்தகு மதிமறு.....” (பரிபாடல் 21: 29 - 31)

திருமால் ஒப்பற்ற காதணிகளைப் பூண்டவன் எனவும் மின்னலைப் போன்று ஒளிவீசும் மணிகள் பதித்த பொற்பூ◌ூண்களை அணிந்தவன் எனவும் அருவியை ஒத்த நிறமுடைய முத்தமாலை அணிந்தவன் எனவும் வர்ணிக்கப்படுவதோடு வானவில் போன்று ஒளிவீசும் ஆபரணங்களையும் அவற்றினிடையே அழகிய முத்தாரத்தையும் அதிலே முத்துப் பதித்த பதக்கத்தையும் அணிந்திருப்பதாகவும் அப்பதக்கம் முழு நிலவைப் போன்று ஒளிவீசுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## திருமாலின் அருட் சிறப்பும் பெருமைகளும்

திருமால் வேதங்களின் பொருளாகவும்; அந்தணர்கள் பேணிக்காக்கும் அறவொழுக்கமாகவும் அருளாகவும் மறமாண்பாகவும் அணங்காகவும் திங்களாகவும் கூற்றாகவும் படைப்பாகவும் ஆகாயம் இப்பூவுலகு அனைத்துமாக இருப்பவன் என வாழ்த்தப்படுவதனூடாக அவனது அருட்சிறப்பும் பெருமைகளும் குறிப்பிடப்படுகின்றன.

“நாவல் அந்தணர் அருமறைப் பொருளே ...” (பரிபாடல் 1: 13)

“விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்

அறனும் ஆர்வலர்க்கு அளியும் நீ...” (பரிபாடல் 1: 40 - 41)

திருமால் மிகவும் தொன்மை வாய்ந்த கடவுள் என்பதை பரிபாடல் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. திருமால் பல ஊழிக்காலங்களுக்கு முற்பட்டவன் எனவும் ஆதிமுதலாக இருப்பவன் அவன் ஒருவனே எனவும் அவனின் தொன்மை எத்தனை ஊழிக்காலங்களுக்கு முற்பட்டது என்று எவராலும் அறிய முடியாத பழமையுடையது எனவும் பரிபாடலில்; திருமால் பற்றிய தொன்மம் கட்டமைக்கப் பட்டுள்ளது. இதனை

ஊழி ஒருவனை உணாத்;தலின் முதுமைக்கு

ஊழி யாவரும் உணரா ஆதி முதல்வ...” (பரிபாடல் 2: 17 - 18)

ஐம்பூதங்களும், ஞாயிறும் திங்களும், பெருஞ்சுடர்கள், அறவோன், ஐந்து கோள்களுக்குரியோர், அசுரர்கள், ஆதித்தர் பன்னிருவர், எட்டு வசுக்கள், 11 உருத்திரர்கள், அசுவினிதேவர்கள், தருமதேவள், கூற்றம் 21 உலகங்கள், உயிர்கள் என இவை அனைத்துமாகத் திகழ்பவன் மாயோன் என பரிஈடல் திருமாலின் பெருமையைப் பேசுகின்றது.

“தீவளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்

ஞாயிறு திங்களும் அறனும் ஐவரும்

திதியின் கிறாரும் விதியின் மக்களும்

மாசில் எண்மரும் பதினொடு கபிலரும்

…………………………

மாயோய் நின் வயின் பரந்தவை…..” (பரிபாடல் 3 : 4 -10)

அமரர்களுக்கும் முதல்வனாகவும் அவுணர்களுக்கும் முதல்வனாகவும் திகழ்பவன் திருமால் என்பதன் மூலம் அவனது தொன்மையும் பழைமையும் விளக்கப்படுகின்றது. இதனைப் பின்வரும் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

“அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வன் நீ

“……..அவுணர்க்கும் முதல்வன் நீ

அதனால் பகைவர் இவர் இவர் நட்போர் என்னும்

வகையும் உண்டோ நின்மரபறிவோர்க்கே” (பரிபாடல் 3: 56-58)

இறைவன் எல்லாப் பொருள்களிலும் இருப்பவன் எங்கும் நிறைந்திருப்பவன் அவன் நெருப்பில் சூடாகவும் பூவில் மணமாகவும், கற்களில் மாணிக்கமாகவும் சொல்லினுள் வாய்மையாகவும் நின்றவன் எனவும் அன்பாகவும் ஆற்றலாகவும் அமைந்தவன் எனவும் வேதங்களில் மந்திரமாகவும் ஐம்பெரும் பூதங்களுள் வானமாகவும், கதிரவனின் ஒளியாகவும் சந்திரனின் குளிர்ச்சியாகவும் காணப்படும் பொருட்கள் யாவற்றிலும் அவற்றின் உட்பொருளாகவும் இருப்பவன் திருமால் என அவனது புகழ் பாடப்படுகின்றது.

“தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ

கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ

அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ

வேதத்து மறை நீ............" (பரிபாடல் 3: 63-70)

பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்களினூடாக புராணச்செய்திகளையும் அவதாரச் செய்திகளையும் அறிய முடிகின்றது. ஊழிக்காலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் உலகு மூழ்கிய போது வெள்ளத்தின் அடியில் மூழ்கிக் கிடந்த இவ் உலகினை எடுப்பதற்காக வராகக் களிறாக அவதாரம் எடுத்து வந்தவர் என்ற அவதாரச் செய்தி கூறப்படுகின்றது. இதனை பரிபாடல் இரண்டாம் பாடல் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

"வளர்திரை மண்ணிய கிளர்பொறி நாப்பண்

வைவான் மருப்பின் களிறு மண்ணயர்பு

புள்ளி நிலனும் புரைபடல் அரிதென...." ( பரிபாடல் 2: 32- 34)

கருட புராணத்தில் கருடன் தேவர்களிடமிருந்து கைப்பற்றிய அமிர்தத்தால் தன் தாயின் துயர் போக்கிய செய்தி கூறப்படுகின்றது. இப் புராணச்செய்தி பரிபாடல் மூன்றாம் பாடலில் இடம்பெறுவதைக் காணலாம்.

"வயங்குபூண் அமரரை வெளவிய அமிழ்தின்

பயந்தோள் இடுக்கண் களைந்த புள்ளினை..." (பரிபாடல் 3: 15 - 16)

ஊழி வெள்ளத்தில் திருமால் அறிதுயில் கொள்ளும் போது அவனின் உத்தியிலிருந்து வளரும் தாமரை மலரில் பிரம்மன் தோன்றி உலகைப் படைத்தான் என்ற புராணம் செய்தி "தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் நீயென மொழியுமால் அந்தணர் அருமறை..." என்ற அடிகள் ஊடாக அறிய முடிகின்றது.

திருமால் வாமணனாக அவதாரம் எடுத்து மாவலியிடம் இரந்து கேட்டு மூவடி நிலத்தை அளந்து பெற்ற போது இறைவனின் திருவடி கீழேல் உலகிலும் சென்று பொருந்திய செய்தியைப் பரிபாடல் தெளவாகக் குறிப்பிடுகின்றது. இதனை பின்வரும் தொடர்களினூடாக அறியலாம்.

"கீழேல் உலகும் உற்ற அடியினை."(பரிபாடல் 3: 20)

"திணிநிலம் கடந்தக்கால் திரிதயர்ந்து அகன்றோடி

நின்னஞ்சி கடற்பாய்ந்த பிணி நெகிழ்ந்து......." (பரிபாடல் 3: 55)

கூந்தன் மா என்ற பெயரோடு கேசி எனும் அரக்கன் திருமாலைக் கொல்ல வந்தபோது அவனை அழித்தமையை "கூந்தல் எனும் பெயரோடு கூந்தல் எரிசினம் கொன்றோய்.."(பரிபாடல் 3)மூலம் அறியலாம்.

அமுதம் பங்கிடப்பட்ட காலத்தில் திருமால் மோகினியாக வந்து ஆடிப்பாடி அசுரர்களை சிரிக்க வைத்தே சாகுமாறு செய்து அமுதத்தை தேவருக்கு கொடுத்தார். இச் செய்தி "நகையச்சாக நல்லமிர்து கலந்த நடுவு நிலை திறம்பிய நயமில் ஒருகை (பரிபாடல் 34-35) என்ற பாடல் வரிகள் மூலம் விளக்கப்படுகின்றன.

பிரகலாதனுக்கு துன்பங்கொடுத்த இரணியனை நரசிம்ப அவதாரம் எடுத்து தூணைப் பிளந்து அவனைக் கொன்ற செய்தியையும் பரிபாடல் விபரிக்கின்றது.

"நிற்புகழ்ப் புகைந்த நெஞ்சின் புலர்ந்த சாற்றின்

பிருங்க லாதன் பல பல பிணிபட

...............

இன்னல் இன்னரொடு இடிமுரசு இயல்

வெடிபடா ஒடி தூண் தடியொடு

தடி தடி பல பட வகிர்வாய்த்த உகிரினை (பரிபாடல் 4: 10-20)

திருமாலின் சக்கர்ப்படையும் கொடிகளின் பெருமையையும் நோக்கினால் அவனுக்குரிய கொடிகளாக வேழக்கொடி, கருடக்கொடி பனைக்கொடி, கலப்பைக்கொடி, போன்றவை கூறப்பட்டாலும் அதில் கருடக்கொடியே உயர்ந்தது எனச் சிறப்பிக்கப்படுகிறது.

"சேவலங் கொடியோய்....." (பரிபாடல் 1 : 11)

"புள்ளின் கொடியவை புரிவளையினவை

எள்ளுநர்க் கடந்தட்ட இகல் நேமியவை" (பரிபாடல் 2 : 59-60)

"செவ்வாயுணவத் துயர் கொடி யோயே" (பரிபாடல் 2:60)

சேவலோங்கு உயர்கொடியோயே

சேவலோங்கு உயர்கொடி

நின்னொன்று உயர்கொடி பனை

நின்னொன்று உயர்கொடி நாஞ்சில்

நின் ஒன்றா உயர்கொடி ஒன்றின்று...." (பரிபாடல் 4: 36-41)

கருடக்கொடியிலுள்ள கருடனின் இடையில் கச்சாகவும் தோள்வளையாகவும், தலைமாலையாகவும் பிற அணிகலன்கள் யாவுமாகவும் பாம்பே காணப்பட்டது என்பதைப் பரிபாடல் மூன்று விபரிக்கின்றது.

திருமாலின் கையிலுள்ள சக்கரப்படை மின்னல் போன்றும், பொன்போன்றும் ஒளி வீசும் தன்மையுடையது எனவும் மிகுந்த வேகத்தைக் கொண்டது எனவும் அது பகைவர்களின் தலைகள் அற்று வீழவுச் செய்தது எனவும் பகைவரது உயிரைப் போக்கும் தன்மையுடையது எனவும் கூறப்படுகிறது.

பரிபாடல் இரண்டாம் பாடலில் திருமாலின் சங்கொலியும் சக்கரப் படையின் செயலும் விபரிக்கப்படுகிறது. பகைவர்கள் சங்கொலிகேட்டு தமது கொடிகளை விழச் செய்தனர் எனவும் மணி முடிகள் அதிர்ந்து விழுந்தன எனவும் செவிகள் செவிடுபட்டன எனவும் கூறப்பட்டது. சக்கரப்படை பகைவர்களின் தலைகளை அறுபடச் செய்தமை பத்தாயிரம் காய்களைக் கொண்ட பனங்காய்க் குலைகள் அறுபட்டு சிதறுவதைப் போன்று வீழ்ந்ததாக கூறப்பட்டது. இப்பாடல் ஒரு போர்க்களக் காட்சியை வர்ணிக்கின்றது.

"குருகு பறியா நீளிரும் பனைமிசைப்

பல பதினாயிரங் குலைதரை உகிர்வளேல்

நில்லாது ஒரு முறை கொய்யுபு கூடி

ஒருங்குண்டு பிளந்து நெரிந்துரன்பு சிதறுபு

அளறு சொரிபு நிலஞ்சோரச்

சேரார் இன்னுயிர் செருக்கும்

போராடு குருசில் நீ ஏந்திய படையே" (பரிபாடல் 2: 43-49)

பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்களில் அவன் உறைகின்ற திருமாலிருஞ்சோலையின் செழிப்பும் வளமும் அதன் சிறப்பும் விபரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். நிலவுலகுக்கு உதவும் பலபொருட்களையும் பயனையும் தருவது திருமாலிருஞ்சோலை எனவும் அது மலைகளுட் சிறந்தது

எனவும் திருமாலையும் பலராமனையும் தாங்கி நிற்கும் நிலை பேற்றைக் கொண்ட மிக உயர்ந்தது திருமாலிருஞ்சோலைக் குன்றம் எனவும் அதில் திருமால் கோயில் கொண்டுள்ளான் எனவும் கூறப்பட்டுள்ளது. பரிபாடல் பதினைந்தாம் பாடலில் சோலைகளையும், நன்னீர் சுனைகளையும் கொண்டது திருமாலிருஞ்சோலை. அது பறவைகளும் மந்திகளும் களித்திருக்கும் இடம் எனவும் சிறப்பிக்கப்படுகிறது. உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்ட பரிபாடற் பகுதிகளில் ஆதிசேடனின் சிறப்புக்களும் அவனுக்கான கோயிலின் பெருமைகளும் நாகர் நகர் பற்றிய செய்திகளையும் சிறப்பிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அந்தவகையில் திருமால் பற்றிய தொன்மத்தையும் பரிபாடலின் கட்டமைப்பையும் அறிய முடிகின்றது.

## உசாத்துணை நூல்;கள்


1. புலியூர்க்கேசிகன், (2002), பரிபாடல் தெளிவுரை, பாரிநிலையம், சென்னை.
2. அம்மன்கிளி முருகதாஸ், சங்க கவிதையாக்கம் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. கைலாசபதி.க (2006), தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. பத்மநாதன் (பதிப்பாசிரியர்), 2007, சங்க இலக்கியமும் சமூகமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. மௌனகுரு.சி., (2003) சங்க கால சமூகமும் இலக்கியமும் ஓர் மீள்பார்வை, கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.
6. வித்தியானந்தன்.சு., (2003), தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
7. வேங்கடசாமி மயிலை சீனி, (2001), நுண்கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. சிவத்தம்பி. கா (2005), பண்டைத்தமிழச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.